*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*20 08 2025 WEDNESDAY 12 40 PM*
*ஆகாஷ்வாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயாக கூட்டணியின் வேட்பாளராக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இன்று வேட்புமனு தாக்கல் செய்தார்.

2. எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டன.

3. சரக்கு மற்றும் சேவை வரி கட்டமைப்பில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் குறித்து மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாரமன், இன்று அமைச்சர்கள் குழுவுடன் ஆலோசனை நடத்துகிறார்.

4. சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரனின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

5. தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று தமது வேட்புமனுவை தேர்தல் அதிகாரியிடம் தாக்கல் செய்தார்.

அப்போது, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திரு. ராஜ்நாத் சிங், திரு. ஜெ.பி. நட்டா, திரு. கிரண் ரிஜிஜு மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் தலைவர்களும் உடனிருந்தனர்.

இந்த தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளையுடன் நிறைவடைகிறது.

நாளை மறுநாள் வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை மேற்கொள்ளப்படும். மனுக்களை திரும்பப் பெற இம்மாதம் 25ஆம் தேதி கடைசி நாளாகும்.

அடுத்த மாதம் 9ஆம் தேதி தேர்தல் நடைபெறும்.

>>>>>>><<<<<<<

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் பிறந்த நாள், மதநல்லிணக்க தினமாக இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ராஜீவ்காந்தியின் பிறந்த நாளில் அவருக்கு மரியாதை செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

தில்லி வீர் பூமியில் உள்ள ராஜீவ்காந்தி நினைவிடத்தில், காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, பொதுச்செயலாளர் திருமதி. பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

>>>>>>><<<<<<<

*நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.*

*பீகார் மாநில சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால். முதலில் நண்பகல் 12 மணிவரை இரு அவைகளும் ஒத்தி வைக்கப்பட்டன.*

*மக்களவை நண்பகல் 12 மணிக்கு கூடியபோது, ஆன்லைன் விளையாட்டுகளுக்கு தடை விதிப்பதற்கான மசோதா தாக்கல் செய்யப்பட்டது.*

*அப்போது, காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பதாகைகளை ஏந்தி, அமளியில் ஈடுபட்டனர்.*

*இதனையடுத்து. மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.*

*எதிர்க்கட்சிகளின் அமளி காரமணாக, மாநிலங்களவையும் பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.*

*>>>>>>><<<<<<<*

*தமிழகத்தின் வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களில் கடந்த பத்தாண்டுகளில் சுமார் 20 ஆயிரம் கிராமப்புற இளைஞர்கள், திறன் மேம்பாட்டுப் பயிற்சி பெற்றுள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் திரு. கமலேஷ் பாஸ்வான் தெரிவித்துள்ளார்*

*மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தில், தீன்தயாள் உபாத்யாயா கிராமப்புற திறன் மேம்பாட்டுத் திட்டம், ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி திட்டம் ஆகியவற்றின் கீழ், இந்தப் பயிற்சி அளிக்கப்படுவதாக கூறியுள்ளார்.*

*இந்தப் பயிற்சி பெற்றவர்களில் 11 ஆயிரத்து 19 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளதாகவும் திரு. கமலேஷ் பாஸ்வான் தெரிவித்துள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*சரக்கு மற்றும் சேவை வரி கட்டமைப்பில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் குறித்து மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாரமன் அமைச்சர்கள் குழுவுடன் இன்று ஆலோசனை நடத்தவுள்ளார்.*

*வரி கட்டமைப்பை எளிமையாக்குவதற்காக நிதியமைச்சகம் முன்வைத்துள்ள பரிந்துரையில், 5 சதவீதம் மற்றும் 15 சதவீதம் என ஈரடுக்கு வரிக் கட்டமைப்பு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.*

*அத்தியாவசியமில்லாத சில பொருட்களுக்கு 40 சதவீத சிறப்பு வரி விதிப்பு குறித்தும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.*

*தற்போதுள்ள 12 மற்றும் 28 சதவீத அடுக்குகள் நீக்கப்படுவதால், மக்களுக்கு குறைந்த விலையில் பொருட்கள் மற்றும் சேவைகள் உறுதி செய்யப்படும் என்றும் மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*>>>>>>><<<<<<<*

தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா மீது அவரது இல்லத்தில் தாக்குதல் நடத்திய நபரை, காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

திருமதி. ரேகா குப்தா உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள், அவரது உடல்நிலை சீராக உள்ளதாக தெரிவித்தனர்.

இதனிடையே, தாக்குதல் நடத்திய நபரிடம் தில்லி காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தில்லி முதலமைச்சர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை பிஜேபி வன்மையாக கண்டித்துள்ளது.

அக்கட்சியைச் சேர்ந்த தில்லி அமைச்சர் திரு. பர்வேஸ் சாகிப் சிங் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த தாக்குதல் ஜனநாயகத்தின் மீதான நேரடி தாக்குதல் என்று குறிப்பிட்டுள்ளார்.

எந்தவொரு சூழ்நிலையிலும் ஜனநாயக நடைமுறைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் கூறியுள்ளார்.

ஆம் ஆத்மி கட்சியின் தில்லி அவைத்தலைவர் திருமதி. அதிஷியும் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக கட்டமைப்பில் வன்முறைக்கு இடமில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

ஆசிய – பசிபிக் ஊடகங்கள் நம்பகத்தன்மையுடன் திகழ்வதாக பிரஸார் பாரதியின் தலைமைச் செயலதிகாரி திரு. கவ்ரவ் துவிவேதி கூறியுள்ளார்.

தாய்லாந்தின் புக்கெட்டில் நடைபெற்று வரும் ஆசிய – பசிபிக் மேம்பாட்டு நிறுவனத்தின் 23வது மாநாட்டின் இன்று உரையாற்றிய அவர். கலாச்சாரம், கல்வி மேம்பாடு மற்றும் சமூக பொறுப்புணர்வுடன் இந்த உடகங்கள் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரனின் நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஆங்கிலேய காலனித்துவ ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி, மகத்தான தியாகம் செய்த அச்சமற்ற தளபதி ஒண்டிவீரன் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது ஈடு இணையற்ற துணிச்சலும், தியாகமும், நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்கு உத்வேகம் அளித்ததுடன், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க நம்மை தொடர்ந்து வழிநடத்துவதாகவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தியில், ஆங்கிலேயருக்கு நெல்லை கப்பமாக செலுத்த மறுத்து, நெற்கட்டும்செவலை, நெற்கட்டான்செவலாக மாற்றிய ஒண்டி வீரனின் வரலாற்றை நாடுமுழுவதும் கொண்டு சேர்க்க உறுதியேற்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மாவீரன் பூலித்தேவனின் படைத்தளபதியாக இருந்த ஒண்டிவீரன், நெற்கட்டும்செவலை தாக்க வந்த ஆங்கிலேயப் படைகளை தனி ஒருவராக எதிர்கொண்டு வெற்றி கண்டவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

ஒண்டிவீரன் போன்றவர்களின் தியாகத்தை நமது சந்ததிகளிடம் எடுத்துரைப்போம் என்றும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

நெல்லை, பாளையங்கோட்டையில் உள்ள ஒண்டி வீரன் மணிமண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது சிலைக்கு, தமிழக அரசின் சார்பில், சட்டப்பேரவை தலைவர் திரு. அப்பாவு, மாநில அமைச்சர் திரு. மதிவேந்தன், ஆட்சியர் திரு. சுகுமார் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

>>>>>>><<<<<<<

தஞ்சாவூர் மாவட்ட பாமக நிர்வாகி ராமலிங்கம் கொலைவழக்கு தொடர்பாக, தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 8 இடங்களில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் இன்று சோதனை மேற்கொண்டனர்.

திண்டுக்கல், பேகம்பூர் பகுதியில் வசித்து வரும் SDPI கட்சி நிர்வாகி ஷேக் அப்துல்லா என்பவர் வீட்டில் இன்று காலை முதல் சோதனை மேற்கொண்டனர்.

இதேபோன்று, கொடைக்கானல் மலைப்பகுதியில் உள்ள கொடைக்கானல் நகரில் உள்ள இரண்டு வீடுகள் மற்றும் இரண்டு கடைகளிலும், பூம்பாறை மலை கிராமத்தில் ஒரு இடத்திலும் சோதனை நடத்தப்பட்டது.

இம்மாவட்டத்தில் உள்ள வேடச்சந்தூர் மற்றும் ஒட்டன்சத்திரத்திலும் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>><<<<<<<

இந்திய ராணுவத்தின் மெட்ராஸ் ரெஜிமெண்ட் தொடங்கப்பட்டு, 250 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி, நடைபெற்று வரும் மோட்டார் சைக்கிள் பேரணி இன்று, கேரள மாநிலம் சென்றடைந்தது.

தமிழகம் மற்றும் கேரளாவில் உள்ள 23 இடங்களுக்கு இந்த மோட்டார் சைக்கிள் பேரணி செல்கிறது.

இதில், சுற்றுச் சூழல் மற்றும் காற்றுமாசை குறைப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மின்சாரத்தால் இயங்கும் இருசக்கர வாகனங்கள் பேரணியில் இடம்பெற்றுள்ளன.

>>>>>>><<<<<<<

சத்திஷ்கர் மாநில அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

ராய்ப்பூரில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திரு. கஜேந்திர யாதவ், திரு. ரஜேஷ் அகர்வால், திரு. குரு குஷ் வந்த் சாகிப் ஆகிய 3 பேருக்கு ஆளுநர் திரு. ராமன் தேகா, பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

அம்மாநில முதலமைச்சர் திரு. விஷ்ணு தியோ சாய், சட்டப்பேரவை தலைவர் திரு. ரமன் சிங் மற்றும் மாநில அமைச்சர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

>>>>>>><<<<<<<

ஸ்பெயினின் தென்மேற்கு மற்றும் வடமேற்கு மண்டலங்களில் பரவி வரும் காட்டுத் தீ காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டின் வடமேற்கு *Galicia* மற்றும் *Castilla – Leon* பகுதிகள் இந்த காட்டு தீயினால் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, ஐரோப்பிய தீ தடுப்பு தகவல் மையம் வெளியிட்டுள்ள செய்தியில், சுமார் 4 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பு இந்த தீயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டுக்குப் பிறகு மிக மோசமான பாதிப்பை இந்த காட்டுத்தீ ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையே, அந்நாட்டு பிரதமர் திரு. *Perto Sanchez* பாதுகாப்பு அவசர நிலையை அறிவிப்பது தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

>>>>>>><<<<<<<

குஜராத், கோவா மற்றும் மஹாராஷ்ட்ராவின் கடலோரப் பகுதிகளில் இன்று அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் மும்பை, புனே, ராய்கட், தானே மற்றும் பால்கர் உள்ளிட்ட பகுதிகளில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<

தாய்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-1, 6-2 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் *Noppadol Noikor*-ஐ வென்றார்.

இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் சித்தார்த் விஸ்வகர்மாவும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

துரந்த் கோப்பை கால்பந்து போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் *Diamond Harbour* அணி இன்று ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

>>>>>>>END<<<<<<<